முதன்மைக் கல்வி அலுவலகம்
வேலூர்

ந.க.எண்.2076/ஆ4/2026
நாள் :02 .07.2026

# சுற்றறிக்கை

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – வேலூர் மாவட்டம் – பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு TET paper I மற்றும் paper II –04.07.2026 (சனிக்கிழமை) மற்றும் 05.07.2026 (ஞாயிறுக்கிழமை) –தேர்வெழுதும் ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவுரைகள் தொடர்பாக.

பார்வை : ஆசிரியர் தேர்வு வாரிய அவர்களின் 02.07..2026 இணை இயக்குநர் அன்று நடைபெற்ற கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகள்.

நடைபெறவிருக்கும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு TET paper I மற்றும் paper II –04.07.2026 (சனிக்கிழமை) மற்றும் 05.07.2026 (ஞாயிறுக்கிழமை ) தேர்வுகள் எழுத உள்ள ஆசிரியர்களுக்கு மேற்காண் பார்வையில் கண்ட இணை இயக்குநர் அவர்களின் அறிவுரைகள் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, தலைமை ஆசிரியர்கள்/மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் தங்கள் பள்ளியிலிருந்து மேற்கண்ட தேர்வுகளை எழுத உள்ள ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகளை அவசியம் தெரிவித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஆசிரியர்கள் தேர்வு வாரிய இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட Hall Ticket–ஐ மட்டுமே தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும்.
2. ஆதார், கடவுச்சீட்டு, பான் அட்டை, ஓட்டுநர் உரிமம் original அடையாள அட்டையை (ஏதேனும் ஒன்று ) தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும்.
3. இரண்டு BLACK BALL POINT– பேனாக்களை (கருப்பு மை பந்துமுனைப் பேனா) தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டும்.
4. காலை 08.30 மணிக்கு தங்களுக்கு ஒதுக்கீடு செய்த தேர்வு மையத்திற்கு சென்று விட வேண்டும்.
5. Hall Ticket– தேர்வர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவரைகளை நன்கு படித்து அதன்படி செயல்பட வேண்டும்.
6. OMR தாளில் எக்காரணம் கொண்டும் Whitener பயன்படுத்தக் கூடாது.
7. Hall Ticket–ல் உள்ள சரியான Roll Number–ஐ OMR – தாளில் எழுத வேண்டும்.
8. Gate Closing Time காலை 9.30–க்குப் பிறகு செல்லும் தேர்வர்கள் எவருக்கும் தேர்வு மையத்திற்குள் செல்ல அனுமதி கட்டாயம் கிடையாது.
9. எனவே. உரிய நேரத்திற்குள் அவசியம் சென்று விட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

"தேர்வெழுதும் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்"

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்:-

1. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் (உரிய வழியாக)
2. தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் அனைத்து வகைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் .
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) வேலூர்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வேலூர்
4. உதவித் திட்ட அலுவலர். (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி), வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள். வேலூர் மாவட்டம்.

நகல்

சென்னை-06. ஆசிரியர் தேர்வு வாரியம், இணை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.